தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 21, யுவ - திருவள்ளுவர் ஆண்டு 2026

1995, மே **4**, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. ச. காந்திராஜன் அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

"என்னைமுன் நில்லன்மின் தெவ்வீர் பலர்என்னை
முன்றின்று கல்நின் றவர்"

பகைவரே, என்னுடைய தலைவரை எதிர்த்து நிற்காதீர்கள். ஏற்கெனவே என் தலைவரை எதிர்த்து, வீழ்ந்து நடுகல்லாய் ஆனோர் பலர். (மேசையைத் தட்டும் ஒலி)

1. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக்கோரும் தனித்தீர்மானம்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம். இத்தீர்மானத்தை முன்மொழிய பேரவை இசைவு அளிக்கிறதா என்பதை அறிவதற்கு முன்பு, இந்தத் தீர்மானத்தை நான் இந்தப் பேரவையில் படிக்க வேண்டும். அந்தத் தீர்மானம் கீழ்க்கண்டவாறு உள்ளது: (குறுக்கீடு)

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சிங்காரம், உட்காருங்கள். இதிலே Point of order வராது. தீர்மானம் வருமாறு:

"மாண்புமிகு திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்களைப் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்கவேண்டுமென்று இப்பேரவை தீர்மானிக்கிறது" (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சிங்காரம், உட்காருங்கள். நான் தீர்மானத்தைப் பற்றி முதலில் தெரிவித்து விடுகிறேன்.

இந்தத் தீர்மானத்திற்கான அறிவிப்பைக் கொடுத்து இருப்பவர்கள் பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. மா. சுந்தரதாஸ், திரு. சோ. பாலகிருஷ்ணன், திரு. வி. கே. லட்சுமணன், திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன், திரு. ஆர். ஈஸ்வரன், திரு. கே. கந்தசாமி ஆகியோர். இந்தத் தீர்மானத்திற்கான அறிவிப்பை இவர்கள் 19-4-1995-ஆம் தேதியன்று சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அவர்களிடத்தில் கொடுத்து இருக்கின்றார்கள். பேரவை விதி 68-இன் படி சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அவர்களிடம் கொடுத்து இருக்கின்றார்கள். பேரவை விதி 69 "On receipt of notice under rule 68, motion for leave to move the resolution shall be entered in the list of business in the name of the member concerned on the day of the meeting immediately after the expriy of the fourteen days' notice as required under Article 179 of the Constitution." 19-ஆம் தேதி இதற்கான அறிவிப்பை பேரவையினுடைய செயலாளர் அவர்களிடத்திலே கொடுத்து இருக்கின்றார்கள். அதற்குப் பின்னால் 14 முழுமையான நாட்கள் முடிவடைந்து இன்றைய தினம் கான்ஸ்டிடியூஷனுடைய Provision அடிப்படையில் இது விவாதத்திற்காக வருகின்றது. எனவே, பேரவை விதி 70(1)-ன் படி இந்தத் தீர்மானத்தை முன்மொழிய பேரவை தன்னுடைய இசைவை அளிக்க வேண்டும். பேரவை விதி 70(1) "On that day the person presiding over the Assembly shall read the resolution to the Assembly and request the members who are in favour of leave being granted to move the resolution to rise in their places. If not less that thirty-five members rise, the person presiding over the Assembly shall declare that leave has been granted. If less than thirty-five members rise, he shall inform the member giving notice of the resolution that he has not the leave of the Assembly to move it." இந்த விதி 70(1)-ன் கீழ் இந்தத் தீர்மானத்தை முன்மொழிய பேரவை தன்னுடைய இசைவை அளிக்க வேண்டும். எனவே, பேரவை இசைவை அளிக்கிறதா என்பதை அறிய, இத்தீர்மானத்திற்கு இசைவு அளிக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய இருக்கையில் எழுந்து நிற்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

(ஒரு உறுப்பினர்கூட எழுந்து நிற்கவில்லை)

இந்தத் தீர்மானத்திற்கு இசைவு அளிக்க இந்தப் பேரவையில் ஒருவர்கூட எழுந்து நிற்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையால், தீர்மானத்தை முன்மொழிய பேரவையினுடைய இசைவு

துளியும், எள்ளளவும், எள் முனையளவும் இல்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, பேரவை விதி 70 (1)-ன் படி, இந்தத் தீர்மானத்தைக் கொடுத்த உறுப்பினர்களுக்கு இந்தப் பேரவையினுடைய இசைவு இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-05

தீர்மானத்தைப் பேரவையில் முன்மொழிவது பற்றிய வினாவே எழவில்லை என்பதையும் நான் இந்தப் பேரவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி). இந்த நேரத்தில் நான் இந்தப் பேரவைக்கு இன்னொன்றையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்றையதினம் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அவையில் தாங்கள் பேசுவதற்கோ அல்லது செயல்படுவதற்கோ உரிய ஜனநாயகம் இல்லை என்று இந்த அவையிலேயும் சரி, இந்த அவையை விட்டு வெளியே சென்ற பிறகு பத்திரிகை நிருபர்களை வைத்தும் சரி—பத்திரிகையில்கூட விளம்பரத்தைக் கொடுப்பதை அவர்கள் வாடிக்கையாக செய்து வருகிறார்கள்—இன்றையதினம்கூட இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களும் இதை நன்றாக அறிந்து இருக்கிறீர்கள், அவர்கள் அறிவிப்புக் கொடுத்த இந்தத் தீர்மானத்தை முன்மொழிவதற்காக இன்றையதினம் நம்முடைய நிகழ்ச்சி நிரலிலும் அது சேர்க்கப்பட்டு, இந்த அவையினுடைய விதிகளுக்கு உட்பட்டு, விதிகளை நாம் கடைப்பிடித்து, ஜனநாயக முறையில் செயலாற்றி வருகிறோம் என்பதை அவர்களுக்கு நேற்றையதினமே அறிவித்து அதற்குப் பின்னாலே இந்தத் தீர்மானம் இன்றையதினம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதைத் தெரிந்துகொண்டும் இந்தத் தீர்மானத்தை முன்மொழியக்கூட இன்றையதினம் அவர்கள் இந்த அவைக்கு வராமல் இருந்ததால் ஜனநாயகத்தை அவர்கள்தான் கடைப்பிடிக்கவில்லை என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக ஆக்குகிறவர்கள் இந்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் என்பதை அவர்களே இன்றையதினம் நிருபித்துக் காட்டியிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி). எதற்காக நான் இதனைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், ஏற்கெனவே இதேபோல் நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மீது ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர அறிவிப்பைக் கொடுத்துவிட்டு அதற்குப் பின்னால் சாதாரண ஒரு மனிதனுக்குத்

தெரிந்து இருக்கிற சட்ட விதிகளைக்கூடத் தெரிந்து கொள்ளாமல், இந்த அவையிலே முன்மொழியப்பெற்ற தீர்மானம் வழிமொழியப்படவேண்டும் என்கிற அந்த ஒரு சாதாரண விதியைக்கூடத் தெரிந்து கொள்ளாமல் (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் ஏதோ சட்டமன்ற உறுப்பினராக மட்டும் இருந்தால் பரவாயில்லை, எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அன்றையதினம், முன்மொழிந்த தீர்மானம் வழிமொழியப்படாத காரணத்தாலே அது கைவிடப்பட்டது. அதற்குப் பின்னால் இந்த அவையை நடத்தியவர் மீது குற்றம் சொல்லி, இந்த அவையிலே நாங்கள் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை, எங்களுக்கு வாய்ப்புக் கொடுக்காத காரணத்தாலே நாங்கள் அன்றும் வெளியே செல்கிறோம் என்று சொல்லி கேலிக்கூத்தாக நடந்து கொண்டார்கள். காங்கிரஸ் கட்சியினுடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அவருடைய கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அன்றையதினம் அதை ஒரு கேலிக்கூத்தாக ஆக்கினார்கள்.

அதேபோன்று இன்றும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மீது, இங்கே இந்த அவையிலே இருந்து அவரை நீக்க வேண்டுமென்று சொல்லி ஒரு தீர்மானத்தைக் கொடுத்துவிட்டு அதற்குப் பிறகு, சட்டபூர்வமான விதிகளின் அடிப்படையில் நாம் இன்றையதினம் அதற்கான அலுவலை எடுத்துக்கொண்டு இருக்கிறபோது, அவர்கள் இதை ஏதோ சாதாரணமாக எடுத்துக்கொண்டு—ஏதோ கொடுப்பதும், கொடுத்த பிறகு மறுபடியும் அவர்களாக வெளியே சென்றுவிடுவதும்—நாம் ஜனநாயகத்துக்கு உட்பட்டு எடுக்கின்ற நடவடிக்கையில் கலந்துகொள்ளாமல் இன்றையதினம் மீண்டும் ஒருமுறை காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் ஜனநாயகத்தை, சட்டமன்றத்தைக் கேலிக்கூத்தாக ஆக்கியிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றையதினம்கூட இந்த அவையிலே மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. டேனியல்ராஜ் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொடுத்துவிட்டு, அது அவையிலே முறைப்படி எடுத்துக் கொள்ளப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்ன பிறகும்கூட மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. டேனியல்ராஜ் அவர்கள் அதனையும் மீறி இந்த அவையினுடைய விதியை மீறி உடனடியாக எங்களுக்குப் பதில் வேண்டுமென்று கேட்டபோது, மரியாதைக்குரிய தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி

அவர்கள் அதற்கு பெருந்தன்மையோடு நான் பதில் சொல்லுகிறேன் என்று பேரவைத் தலைவரிடத்திலே சொல்லி நேற்றையதினம் அதற்கான பதிலையும் அளித்தார்கள். பதிலைக் கொடுக்க மாட்டார்கள் என்று கருதி அதனை எழுப்பியவர்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்கும் நான் பதில் தருகிறேன் என்று பதில் சொன்னவுடன் (மேசையைத் தட்டும் ஒலி) பதில் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம் என்று சொல்லி மிகப் பெரிய ஒரு கலாட்டாவை இந்த அவைக்குள்ளே நடத்திக் காட்டியதை இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களும், எதிர்க்கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும், இங்கே இருக்கிற பத்திரிகை நிருபர்களும், மற்றும் மாடத்திலே இருந்து பார்த்துக்கொண்டிருந்த பார்வையாளர்கள் அத்தனைபேர்களும் அறிந்து இருக்கிறார்கள்.

முற்பகல் 10-10

நாட்டு மக்களுக்கு தங்களது கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே இல்லாமல் தங்களுடைய கடமைகளைச் செய்ய வேண்டிய ஒரு முறையான அடிப்படையில் இல்லாமல் சட்டமன்றத்திற்கு வரமாட்டோம் என்று பத்திரிகையிலே விளம்பரம் செய்வதும், அதற்குப் பின்னால் திடீரென்று சட்டசபைக்கு உள்ளே நுழைந்து கலாட்டா செய்வதும், சட்டமன்றத்திலே மிக மோசமாக, சட்டம் ஒழுங்கு பிரச்சினை கெட்டது போன்ற ஏதோ ஒரு சூழ்நிலையை உண்டு பண்ண நினைப்பதும். அதற்குப் பின்னாலே தமிழக சட்டமன்றம் ஜனநாயகம் இல்லாமல் நடைபெறுவதாக வெளியிலே சொல்லிக் கொண்டும், இந்த சட்டமன்றத்திலே மிகப் பெரிய ஜனநாயகக் கேலிக்கூத்தைச் செய்துகொண்டும் இருக்கிறவர்கள் காங்கிரஸ் கட்சிக்காரர்கள்தான் என்பதை மீண்டும் நிரூபிக்கின்ற முறையில் மீண்டும் இன்று நடந்து கொள்கிறார்கள். இதற்காக பேரவைத் துணைத் தலைவர் என்ற முறையிலே நான் அவர்களுக்கு என்னுடைய கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படித் தீர்மானம் கொடுப்பது, கொடுத்த பிறகு, அதை ஜனநாயக முறைப்படி, விதிமுறைகளுக்குட்பட்டு இங்கே எடுத்துக் கொள்கிறபோது வராமல் இருப்பது, இப்படியொல்லாம் அவர்கள் சட்டமன்றத்திலே கேலிக் கூத்தாக நடந்து கொள்வது போன்றவற்றை நான் கடுமையாகக் கண்டிக்கிறேன். மாண்புமிகு பேரவை முன்னவர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தவர்கள் தாங்கள் அதை அவையில் எடுத்துக் கொள்கிறபோது, இந்த அவையிலே இல்லாமல் போய் விட்டார்கள். ஆகவே, எதிர்ப்பு தெரிவிக்க இருந்தவர்கள் இல்லாமல் போய் விட்டார்கள். இங்கிலாந்து பாராளுமன்றத்திலே கூட அரசனை எதிர்த்துச் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்று தெரிந்து, பாராளுமன்றத்திற்கு அரசன் வந்தபோது, அவர்களெல்லாம் பாராளுமன்றத்தினை விட்டு வெளியேறி விட்டார்கள். இதனைக் கண்டவுடனே அரசன் the birds flew away என்று சொன்னான். பறவைகள் எல்லாம் பறந்து போய்விட்டன என்று கூறினான் என்று வரலாறு உண்டு. அந்த முறையிலே எதிர்க்கட்சியினர் பறந்து போய் விட்டாலும் கூட, இப்போது இந்த அவையிலே இருக்கின்ற அத்தனை உறுப்பினர்களும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே முழு நம்பிக்கை வைத்து இருக்கிறோம் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே தெரிவித்து அமர்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 68-ன்கீழ் பேரவைத் தலைவர் மீதோ அல்லது பேரவைத் துணைத் தலைவர் மீதோ பதவியை விட்டு நீக்குவதற்கு அரசியல் சட்டப்படி 179-(சி)-ன்படி உறுப்பினர்கள் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொடுத்து விட்டு, விதிப்படி இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் 14 நாட்கள் கழித்துத்தான் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிந்திருந்து, அந்த 14 நாட்கள் கழித்து கூடக்கூடிய முதல் கூட்டத் தொடரிலே இந்த தீர்மானம் வரும் என்று அஜென்டாவில் போட்டு, அது மெம்பர்களுக்கு நேற்றே கொடுக்கப்பட்டிருக்கிறது. கொடுக்கப்பட்ட பின்னர் அவர்கள் வரவில்லை. வழி மொழியவும் தெரியவில்லை. முன் மொழியவும் தெரியவில்லை. ஒரு அகில இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கு இந்த விதிமுறைகள் கூட தெரியவில்லை. ஆகவே, அரசாங்க செலவிலேயே இவர்களுக்கு விதிமுறைகள் சொல்லிக் கொடுப்பதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு அசோசியேஸனை நியமனம் செய்ய வேண்டும்.

ஏனென்றால் சட்டசபையை கிள்ளுக்கீரையாக நினைக்கிறார்கள். தீர்மானம் கொடுப்பது, பிறகு வராமல் போவது. நான் எல்லாம்

எவ்வளவு பொறுமையான உறுப்பினர். எனக்குக் கோபம் வராது. எனக்கு முன்னாலே நடக்கிறது. மைக்கை உடைக்கிறார்கள். ரமேஷ் என்கின்ற எம்.எல்.ஏ.வை ஞானசேகரன் எம்.எல்.ஏ. அடிக்கிறதைப் பார்த்தேன். குமாரதாஸ் எம்.எல்.ஏ. அடிக்கும்போது பார்த்தேன். இப்படியாக சட்டத்திற்குப் புறம்பாக, விதிமுறைகளுக்குப் புறம்பாக நடக்கிறார்கள். நமது தமிழ் நாட்டிலே கிருஷ்ணா ராவ் என்ற பேரவைத் தலைவர் இருந்தார். அவரைக் காட்டிலும் மட்டும் அல்லாமல் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு சிறந்த பார்லியமெண்டேரியனாக, விதிமுறைகள் நன்கு தெரிந்த சபாநாயகர் நமது பேரவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையா என்று சொன்னால் அது மிகையாகாது (மேசையைத் தட்டும் ஒலி). காமன்வெல்த் பார்லியமெண்டுக்கு பார்லியமெண்ட் முறையைக் கற்றுக் கொடுத்தவரே நமது சபாநாயகர்தான் என்று சொன்னால் இந்தியாவுக்கே ஒரு வழிகாட்டி என்று சொன்னால் அது மிகையாகாது. ஆகவே, பாரதப் பிரதமரும், பாராளுமன்ற சபாநாயகர் அவர்களும் நமது சபாநாயகரை அழைத்து மாலை போட்டு, இப்படிப்பட்ட பார்லிமெண்டேரியன், விதிமுறைகளைத் தெரிந்த சபாநாயகர் தமிழ்நாட்டிலேதான் இருக்கிறார் என்று பாராட்ட வேண்டியது, மத்திய அரசினுடைய கடமையாக இருக்கிறது. ** தமிழக சட்டசபையில் விதிமுறைகள் ஒழுங்காக கடைப்பிடிக்கப்படுகின்றன. ஆகவே, இந்தியாவுக்கு ஒரு வழிகாட்டியாக, பார்லியமெண்ட் அசோசியேஸனுக்கே வழிகாட்டியாக, இங்கிலாந்து பார்லியமெண்டுக்கே ஒரு வழிகாட்டியாக நமது சபாநாயகர் இருக்கிறார். எந்த எதிர்ப்பும் இல்லாமல் இவர் செயல்படுகிறார். எல்லா சட்டசபைகளிலும் அவர்களுக்கு எதிர்ப்பு இருக்கும்.

முற்பகல் 10-15

எந்த எதிர்ப்பும் இல்லாமல் இருக்கிறார் நம்முடைய சபாநாயகர். எல்லா சட்டசபைகளிலும் உள்ள சபாநாயகருக்கு எதிர்ப்பு இருக்கும். இங்கே ஒரு உறுப்பினர் எழுந்து நிற்கிறாரா? பயந்து ஓடுகிறார்கள். தெருவுக்கு ஓடுகிறார்களே. சட்டசபை அங்கே கூடியிருக்கிறது; தெருவுக்குப் போய் கலாட்டா பண்ணுகிறாயே என்கிறார்கள். கொஞ்சமாவது அவர்களுக்கு விதிமுறைகள் தெரிகிறதா? சட்டசபை எதற்காக இருக்கிறது? வாதாடுவதற்காக. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொடுத்துவிட்டு, ஏதாவது ஒரு காரணம் சொல்லி

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பொது மக்களுக்கு இடைஞ்சல் செய்வதற்கு, தகராறுகள் செய்கிறார்கள். காங்கிரசுக்கு பொதுமக்கள் சரியான பாடம் கொடுக்க இருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட எதிர்க்கட்சியை இனிமேல் பொது மக்கள் புறக்கணிக்கத்தான் செய்வார்கள். இந்தச் சட்டசபையில் சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த உறுப்பினர்களில், அதை ஆதரிப்பதற்கு இன்று ஒரு உறுப்பினர்கூட இல்லை. இதேமாதிரி வருகின்ற காலங்களில் தேர்தலில் ஒரு எம்.எல்.ஏ.-கூட காங்கிரசிலே இருந்து வர மாட்டார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று உங்கள்மீது ஆணையாகச் சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** என்ற வார்த்தைகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது தேவையில்லை என்று நினைக்கிறேன். ** என்ற அளவிலே சொன்னார். அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கி விடலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் கூறிய வார்த்தைகளை, அவைக் குறிப்பைப் பார்த்து, பிறகு அவைக் குறிப்பிலே இருந்து நீக்கிவிடலாம். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இங்கே கொடுத்து, தாங்கள் அதை எடுக்கின்றபோது நான் பாயின்ட் ஆஃப் ஆர்டர் போட்டதற்குக் காரணமே, இது தேவைதானா; இதை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற என்னுடைய கருத்தைத் தெரிவிக்கத்தான் நான் எழுந்தேன். காரணம், எதிர்க்கட்சித் தலைவர், பேரவையை நாங்கள் புறக்கணிக்கிறோம் என்று அறிக்கை கொடுக்கிறார். ஆனால் இங்கே பேரவை உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள். ஆனால் உறுப்பினர்கள் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவந்து இதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1995 மே 4] [திரு. ஆர். சிங்காரம்]

கோருகிறார்கள். நீங்களும் ஜனநாயக ரீதியாக, முறைப்படி எடுத்துக்கொண்டு இருக்கிறீர்கள். ஆனால் அவர்கள் வரவில்லை. ஆனால் தொடர்ந்து அவர்கள் முன்னுக்குப்பின் முரணாகவே இந்த அவையில், இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் தொடங்கிய காலத்திலிருந்தே நடந்து கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு நடந்து கொண்டு, இந்தப் பேரவையினுடைய விதியையும் மீறி, சட்டத்தையும் மீறி, மரபையும் மீறி, எல்லையைத் தாண்டிப் போய், அவர்கள் அநாகரீகமான முறையில் இந்த அவையிலே நடந்து கொண்டு இருக்கிறார்கள் என்பது நமக்கெல்லாம் தெரியும். அப்படியிருந்தும், சரியான காரணமும் அதிலே கூறவில்லை என்றாலும்கூட, நீங்கள் மனதையரியத்தோடு, எதையும் சாதிக்கக் கூடிய சக்தி படைத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே இதை எடுத்துக்கொண்டு இருக்கிறீர்கள். இதை ஒரு சட்டமன்ற உறுப்பினருடைய உரிமை மீறல் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளலாமா? அதே நேரத்தில் இங்கே அவர்கள் வரமாட்டார்கள். ஏனென்றால் அவர்களுக்கு இங்கே சந்திப்பதற்கு திராணியோ, தைரியமோ கிடையாது. ஏனென்றால், சொந்தக் கட்சியிலே ஒரு வேட்பாளரைப் போடக்கூட யோக்கியதை இல்லாத ஒரு (மேசையைத் தட்டும் ஒலி) இயக்கமாக இன்று மாறிவிட்டது குறித்து நான் வேதனை அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)நான் பிறந்தது முதல், விவரம் தெரிந்த காலத்திலிருந்தே காங்கிரஸ்காரன். உண்மையான காங்கிரஸ்காரன். இவர்கள் நடந்துகொள்கின்ற அநாகரீகமான செயலைக் காண்கின்றபோது எனக்கு உண்மையிலேயே வேதனையாக இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாமெல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் புரட்சித் தலைவி அவர்களுடைய தயவினால் நாமெல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்திற்கு வந்து, இந்த மாமன்றத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரவணைப்போடு, நல்ல பண்போடு, பாசத்தோடு சிறப்பான முறையில் பணியாற்றி, தொகுதி மக்களுக்குக் காரியங்கள் செய்யவேண்டிய நாம் அதைச் செய்து வருகிறோம். ஆனால் அவர்கள் அந்த நெறிமுறைகளைக் கொஞ்சமும் கூட பின்பற்றாமல், ஆரம்பக்காலத்திலிருந்தே தொடர்ந்து இந்தச் சர்க்காரை கலைக்க வேண்டும் அல்லது சஸ்பெண்ட் செய்ய வேண்டும்; ஒரு ட்ரீம் மினிஸ்டரியைப் பார்ம் பண்ணவேண்டும் என்ற உணர்விலே அவர்கள் செயல்பட்டார்களே தவிர, இந்தச் சட்டமன்றத்தினுடைய, இந்தப் பேரவையினுடைய விதியையும், இந்த அவையினுடைய நேரத்தையும் விணடிப்பதற்காகவே செயல்பட்டார்கள் என்பதைச் சுட்டிக்காட்டத்தான் நான் எழுந்தேன் என்பதை தெரிவித்துக் கொண்டு, இங்கே ஒரிஜினல் காங்கிரஸாகிய நாங்கள் பிரதான எதிர்க்கட்சியாகிய நாங்கள், அவர்களுக்கு மிகுந்த கண்டனத்தைத் தெரிவித்து அமர்கிறேன்.

[1995 மே 4

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. செல்வராஜ். முற்பகல் 10-20

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தது, பிரதான காங்கிரஸ் கட்சி என்று சொல்கின்றபோது, இன்றைக்கு இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருகின்றபோது, அவர்கள் இங்கே அவைக்கு வந்து கலந்து கொள்ளாத காரணமும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பற்றிப் பேசுகின்ற அளவுக்கு அவர்களுக்கு இன்றைக்கு ஒரு அருகதையும், யோக்கியதையும் இல்லாத அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் சொன்னதைப்போல 110 ஆண்டுகால காங்கிரஸ் கட்சியில் ஒரு வேட்பாளரைப் போடுவதற்கு அருகதை இல்லாத இவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களான இவர்களுக்கு சட்டமன்றத்திலே பேசுவதற்கு வாய்ப்பு இருந்தும் அதைப் பயன்படுத்தாத இவர்கள், வருகின்ற இடைத் தேர்தலிலே காங்கிஸ் கட்சி வேட்பாளரை போடாத இவர்கள், பொதுத் தேர்தலிலே எப்படி வேட்பாளர்களை நிறுத்தப் போகிறார்கள், அதற்கான ஆட்கள் இருக்கிறார்களா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. புதுக்கோட்டைத் தொகுதியில் மட்டுமல்ல, எந்தத் தொகுதியிலும் இனிமேல் காங்கிரஸ் கட்சியில் யாரும் தேர்ந்தெடுக்கப்படமாட்டார்கள் என்பதைக் கேலிக்கூத்தாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். சட்டமன்றத்திலே ஜனநாயகத்தை கடைப்பிடிப்பது இல்லை என்று கூறுகின்ற இவர்கள், ஜனநாயகத்தைக் கடைப்பிடிக்கத் தவறிய இவர்கள் மீது நீங்கள் எடுத்திருக்கின்ற இந்த கண்டனம் தெரிவிக்கின்ற தீர்மானத்தை ஆதரித்து, என்றைக்கும் தமிழ்நாட்டு மக்கள் புரட்சித் தலைவியின் பின்னால் நிற்பார்கள் என்பதை இந்தத் தேர்தல் நிரூபித்துக் காட்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குப் பேரவைத் தலைவர் அவர்களையே எதிர்த்துப் பேச லாயக்கில்லாத இவர்கள், எந்த இடத்திலும் மக்களைச் சந்திப்பதற்கு லாயக்கில்லாதவர்கள் என்பதை இங்கே தெரிவித்து, அவர்களை மீண்டும் கண்டிப்பதோடு, இன்றைக்கு பிரதான எதிர்க்கட்சி என்கிற காங்கிரஸ் கட்சியைக் கேலிக்கூத்தாக்கிய இவர்களை வன்மையாகக் கண்டிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எலக்சன் போது யாரெல்லாம் இங்கு தகராறு பண்ணுகிறார்களோ அவர்கள் அத்தனை பேரும் அம்மா வீட்டு வாசலில் தவம் கிடந்து, நீங்கள் வந்தால்தான் நான் ஜெயிப்பேன், நீங்கள் வந்தால்தான் நான் ஜெயிப்பேன் என்று கெஞ்சிக் கூத்தாடிக் கொண்டிருந்தார்கள். எலக்சன் முடிந்து ஒரு வருடம் வரைக்கும் 'கம்' என்று இருந்தார்கள். அப்புறம் நன்றி கெட்டுப்போய் விட்டார்கள். என்னுடைய தேர்தல் பிரச்சாரத்தின்போது வந்து அம்மா சொன்னார்கள் "நான் நிற்கிற மாதிரி நினைத்துக் கொண்டு ஜீனத் சர்புதீனுக்கு ஓட்டுப் போடுங்கள்" என்று சொன்னார்கள். அதை நான் சாகும்வரை மறக்கப் போவதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது நன்றி வேண்டும். நாலு கால் ஜென்மம்-அதன் பெயரை சட்டமன்றத்திலே சொல்லக்கூடாது என்று நினைக்கிறேன். அதற்குள்ள நன்றிகூட ஆறறிவு படைத்த மனிதனுக்கு இல்லை என்றால் அவன் மனிதனே இல்லை. அதுமட்டுமல்ல, அவர்கள் ஏன் இன்றைக்கு வரவில்லை என்றால், அவர்களுக்கு 35 பேர்கள் கிடைக்கமாட்டார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 10 பேர்கூட கிடைக்கமாட்டார்கள். அதனால், போய் அவமானப்படுவதைவிட, போகாமலே அவமானப்படலாம் என்றுதான் வரவில்லை. அதன் காரணமாக அவர்களுடைய செய்கையை எவ்வளவு மிக மிக வன்மையாகக் கண்டிக்க வேண்டுமோ அவ்வளவு கண்டித்து, அமைகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன் சொன்ன காரணம்தான் உண்மை என்பதை இங்கு உள்ள எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் அறிந்திருக்கிறார்கள். எனவே, ஜீனத் சர்புதீன் மிகத் தெளிவாக, தைரியமாக இதை வெளியிலே சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களுடைய நடவடிக்கைகள், மற்றும் அவர்களுடைய தகுதிகள் என்ன என்பதை அவர்கள் நன்றாகவே அறிந்திருக்கிறார்கள் என்ற அடிப்படையிலே அவர்கள் அதைச் சொல்லியிருக்கின்றார்கள். பாம்பின் கால் பாம்பறியும் என்ற பழமொழி உண்டு. அதேபோல் காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்களுடைய தகுதிகளை அவர்கள் நன்றாக அறிந்திருக்கின்றார்கள். அடுத்து, திரு. சஞ்சய் ராமசாமி.

Thiru Sanjay Ramasamy: Honourable Deputy Speaker, Sir, to-day, six members of the Congress Party have given a resolution against the Speaker. It is a democratic right that they have to move

resolution against the Speaker. But, at the same time, they cannot use their democratic right to refuse another member's democratic right of attending the question hour. In effect, what has happened to-day is, they have actually taken away our privilege of attending the question hour that is normally held at this time, knowing fully well that they are not going to come for the motion that they have moved. I would ask you what is it that you are going to do to protect our rights against these six people who have moved the resolution thereby preventing us from attending the question hour that we would normally do. It is our privilege of attending the question hour that has been breached. Honourable Deputy Speaker, Sir, you should take some action against these people, because this is becoming a regular act of theirs. They cannot go on disrupting the House proceedings. By their act of this, they have definitely taken away our privilege. I request the Honourable Deputy Speaker, Sir, to take some action against this.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சஞ்சய் ராமசாமி, ஏற்கெனவே அந்த அனுமதி உங்களுக்கு மறுக்கப்படுகின்றது என்ற விவரங்களையெல்லாம் நீங்கள் உங்களுடைய கொறடா திரு. சுந்தரதாஸ் அவர்களிடத்திலே சொல்லியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொல்லி, பல்வேறு சந்தர்ப்பங்களிலே பேரவைத் தலைவரிடத்திலே சொல்லியிருக்கின்றீர்கள். அதனை, பேரவைத் தலைவர் அவர்களும் இந்த அவையிலே அவர்களுக்குரிய சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். அப்படிக் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால், இந்த அவையினுடைய உறுப்பினர் என்ற முறையில் அந்த நலனைக் கருதி நான் தலையிட வேண்டி இருக்கும் என்றும் ஏற்கெனவே, தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். அதன் அடிப்படையில் இப்பேரவை இதனைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-25

தாமரைக்கனி அவர்கள், இங்கே பேசுகிறபோது, தன்னுடைய உணர்வுகளை, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்களைப் பற்றி தன்னுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார். அந்தவகையில், இங்கே இருக்கிற

1995 மே 4] [பேரவைத் துணைத் தலைவர்]

ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருடைய—அது ஆளுங்கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், அதேபோல, எதிர்க்கட்சிகளினுடைய பல்வேறு கட்சிகளைச் சார்ந்த தலைவர்களாக இருந்தாலும்—இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவரின் மீது கொண்டிருக்கின்ற மரியாதையை மிகத் தெளிவாக அறிவார்கள். அனைத்திந்திய அண்ணா தி.மு.க.-வின் சார்பில், பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் இதிலே பேச வேண்டுமென்று கேட்டார்கள்; இருந்தாலும், உங்களுடைய உணர்வுகள்தான், எல்லா உறுப்பினர்களுடைய உணர்வுகளும் என்பதை மட்டும் இந்தநேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அவையில் மீண்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இங்கே வந்து, அவர்களுடைய சிறப்பான பணியினைத் தொடர்வதன் மூலம் இந்தியாவிற்கே, மிகச்சிறந்த சபாநாயகராக விளங்குகிறார் என்பதை எடுத்துக் காட்டுகிற வகையிலே (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அவர்களுடைய பணியினை மீண்டும் தொடர வேண்டுமென்று கூறி, என்னுடைய சார்பாகவும், உங்கள் சார்பாகவும் இதனை இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து 1995-96 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை மீது விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

மானியக் கோரிக்கை எண் 30, பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன். மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை) (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், இதற்கு முன்னர் எடுத்துக் கொண்ட பிரச்சினையில், உங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்தி இருக்கிறீர்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

நான் ஆற்றுகிற இந்தப் பணிக்குப் பல்வேறு பாராட்டுக்கள் இருந்தாலும் நான் ஏற்றுக் கொண்டிருக்கிற ஒப்புயர்வற்ற தலைவி, (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) மனதாரப் பல்வேறு நேரங்களில், இந்தப் பேரவையிலேயும், வெளியிலேயும் பாராட்டி இருப்பது, எனக்குக் கிடைத்த மிகப் பெரும் பேறு என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இன்றைக்குப் பேரவையும், அவர்களுடைய

அந்தக் கருத்தை ஏற்று, நீங்கள் உங்களுடைய உணர்வுகளைத் தெரிவித்தமைக்காக, அனைத்து உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் எனக்கு ஒரு ஆசை. ஒரு நாளைக்காவது அங்கேயிருந்து பேசவேண்டும்; சில விஷயங்களை, இங்கே இருந்து என்னாலே பேச முடியவில்லை; எனவே அங்கேயிருந்து பேசுவதற்கு வாய்ப்புக் கொடுப்பார்கள்; அப்போது அவர்களுக்கு நன்றி தெரிவிக்க வாய்ப்பையும் நான் பெறுவேன் என்று பல காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால், இரண்டு முறையும், அந்த வாய்ப்பு வந்தும், இப்படி மிகப் பரிதாபமாக என்னை, அந்த நன்றி சொல்கிற இடத்திலே அமரவிடாமல் செய்து விட்டார்களே என்பதுதான் எனக்கு இருக்கிற வருத்தம். அந்த வகையில், பேரவைக்கும் அந்த உணர்வுகளை வெளிக்காட்டிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் என்னுடைய நன்றியை மீண்டும் தெரிவித்து, பேரவையின் இன்றைய அலுவல்களை எடுத்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

2. மானியக் கோரிக்கைகள், 1995-96, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 30–பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்

(ஆ) கோரிக்கை எண் 25–கைத்தறியும், துணித்தொழிலும்

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1995-96 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண் 30, பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன். இன்றையதினம் இராமானுஜருடைய பிறந்த நாளாகும். ஆதிதிராவிடர்களுக்காக அந்தக் காலத்திலேயே தன்னுடைய இறை பணியோடு ஆதிதிராவிடர் நலப் பணியையும் முழங்கிய அந்தப் பெருமானின் பிறந்த நாளிலேயே ஆதிதிராவிடர் நலத் துறை மீதான மானியக் கோரிக்கையின் விவாதம் இன்றைக்கு எடுத்துக்கொள்வது சாலப் பொருத்தமான ஒன்று. அந்த வகையில்,